சிவகங்கை நகராட்சி
சாதாரண கூட்டம்
மன்றப்பொருள்கள்
**ஜீன்** மாதம் : 30.06.2021

1. சிவகங்கை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ள பணிகளை மேற்கொள்ள தற்போது 80 எண்ணிக்கையிலான துய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் அரசாணை (நிலை) எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்கல் துறை )ந.ப.3) துறை நாள் 30.04.1997ன் படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ள பணிகளை மேற்கொள்ள தேவையான தூய்மை பணியாளர்களின் விபரம் கணக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் Solid Waste Management service என்ற நிறுவனத்தின் மூலம் 133 தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்த காலம் 31.08.2021 முடிவுடைகிறது.

அரசாணை (நிலை) எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) துறை நாள் 30.04.1997 படி தற்சமயம் இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ள பணிகளை மேற்கொள்ள 246 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் அதில் தற்போது பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் தவிர கூடுதலாக தேவைப்படும் 166 எண்ணிக்கையிலான தூய்மை அவர்களின் செந்தர விகித தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ள வேண்டி கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**...505 அனுமதிக்கப்பட்டது

2. சிவகங்கை நகராட்சி நகர் நல மையத்தில் 14.09.2020 அன்று தேசிய குடற்புழு வார விழா நடைபெற இருப்பதை முன்னிட்டு 12.09.2020 முதல் 14.09.2020 வரை ஒலி பெருக்கி மூலம் பொதுமக்களுக்கு விழிபுணர்வு ஏற்படுத்தப்பட்டது மேலும் 14.09.2020 அன்று நடைபெற்ற விழாவில் சாமியானா பந்தல், தலை விரிப்பு டேபிள் பேன் போன்ற முன்னேற்பாடுகள் மேற்கொண்டதற்கான செலவினத் தொகை ரூ.17800/-ஐ நாகுமணி ஒளி & ஒலி என்பவர் சிவகங்கை அவர்களுக்கு உரிமையாளர் பெயர் சந்தான கிருஷ்ணன் பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.....506** அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சி பொதுப்பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு தட்டச்சு பணிக்கு இரண்டு தட்டச்சி பணியாளர்களை ஒருவருடகாலத்திற்கு விநியோகம் செய்ய 30.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ,எண் | ஒப்பந்தாரர் பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு அளித்துள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M.நாட்டரசன் ஒப்பந்ததாரர் 5/1 ராஜாஜி தெரு சிவகங்கை. | ரூ..419 |
| 2 | N.ஆனந்த் ஒப்பந்தாரர் தொண்டி ரோடு சிவகங்கை | ரூ.425 |

**அலுவலகக் குறிப்பு..**

1, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்ளில் வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள திரு.M.நாட்டரசன் ஒப்பந்தாரர் விலை விகிதம் குறைவாக உள்ளதால் இவ்ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்

2,. அவசர அவசிய கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்றுள்ளதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**...507 அனுமதிக்கப்பட்டது

4. சிவகங்கை நகர் பள்ளித்தெரு கதவிலக்கம் 5A1/21(2) இலக்கத்தைச் சேர்ந்த திரு.S.மனோகரன் த/பெ சிவராமு பிள்ளை என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் டபிள்யூ பி (எம்.டி) எண் 8076/2021ன் 20.04.2021ம் தேதிய தீர்ப்பில் பள்ளித் தெருவில் உள்ள சின்டெக்ஸ் நீர் தொட்டியை வேறு இடத்திற்கு மாற்றக் கோரியும் மற்றும் அதில் உள்ள வாசங்களை அழிக்கவும் பொதுமக்கள் நடைபாதையாக உள்ள சிமிண்ட் தளத்தை அகற்ற வேண்டும் என பெறப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து திரு.த.மீனாட்சி சுந்தரம் த/பெ தனபாலன் பள்ளித்தெரு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பெற்ற இடைக்கால தடையாணை வழக்கு எண் டபிள்யு. பி. (எம்.டி) எண்9361/2021 ஐ ரத்து செய்ய நகராட்சி ஆணையாளர் சார்பில் வக்காலத்து படிவம் தாக்கல் செய்தும் வழக்கிற்கு தேவையான பதிலுரை தயார் செய்து வழக்கை நடத்திச் செல்ல வழக்கு கட்டணம் ரூ15,000/- (பதினைந்தாயிரம் மட்டும்) சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு J.லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

   **அலுவலகக்குறிப்பு**

   வழக்கு கட்டணம் ரூ15,000/- (பதினைந்தாயிரம் மட்டும்) நகராட்சி வழக்கறிஞர் திரு.J.லாரன்ஸ் அவர்களுக்கு வழங்கவும் ஆணையாளர் (ம) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்** ....508 அனுமதிக்கப்பட்டது

5. சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை 42 பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சியாரின் செந்தர விகித தினக்கூலி பட்டியலின் அடிப்படையில்

04.12.2019முதல் 03.02.2020 வரை பணிபார்க்க இந்நகர்மன்ற தீர்மான எண்487 நாள் 29.10.2019ல் அனுமதி வழங்கப்பட்டத்தின் படி Southern Solid Management Service என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது இந்நகர்மன்ற தீர்மான எண் 313 நாள் 26.02.2021ன் படி டேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 6 மாதங்களுக்கு அதாவது 04.12.2021 முதல் 03.06.2021 வரை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண் 315 நிள் 26.02.2021 திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 09.01.2021 முதல் கூடுதலாக 33 வரை பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது, தற்போது இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 03.06.2020 வுடன் முடிவடைகிறது இந்நிலையில் கொரானா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாம் அலை தாக்கம் அதிகமாக உள் நிலையில் நோய்தடுப்பு எனவே பொது சுகாதார பணிகளையும் மேற் கொள்ளவது அத்தியாவசியயமாகிறது. எனவே தினக்கூலி அடிப்படையில் 75 பணியாளர்களை கொண்டு பணி செய்திட மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 04.06.2021 முதல் 31.08.2021 வரை கால நீட்டிப்பு செய்து Southern Solid Waste Management Service Mulagumoodu Kanyakumari நிறுவனத்திற்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1, பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்

2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண் 509** அனுமதிக்கப்பட்டது.

6. சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை 58 பணியாளர்கரள மாவட்ட ஆட்சியரின் செந்தர விகித தினக்கூலி பட்டியலின்படி நாள் ஓன்றுக்கு ரூ.385/– என்ற அடிப்படையில் 01/07/2020 முதல் 30.06.2021 வரை ஓராண்டு காலத்திற்கு பணி பார்க்க இந்நகர்மன்ற தீர்மான எண். 478 நாள்

29.10.2019 அனுமதி வழ்ங்கப்பட்டத்தின் படி Southern Solid Waste Management Service என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது தற்போது இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 30.06.2021வுடன் முடிவுடைகிறது ,இந்நிலையில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாம் அலை தாக்கம் அதிகமாக உள்ள நிலையில் நோய்தடுப்பு எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட அதே தினக்கூலி ஒப்பந்த காலத்தை 01.07.2021 முதல் 31.08.2021 வரை கால நீட்டிப்பு செய்து Southern Solid Waste Management Service Mulagumoodu Kanyakumari நிறுவனத்திற்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1, பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்

2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண் 510** அனுமதிக்கப்பட்டது

7. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் நோய் தடுப்பு களப்பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் பயன்படுத்தும் பாதுகாப்பு உபகரணமான கையுறை கொள்முதல் செய்ய குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் 19.05.2021 அன்று கீழ்கண்ட நிறுவினங்களிட்ம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தேவையான பாதுகாப்பு உபகரணம் (ஒன்றுக்கு) | கொள் முதல் விலை ரூ |
|---|---|---|---|
| 1 | RVS Marketing g18 Shakthi Vinayagar Koil Street Vinayagapuram Ambattur/ | கையுறை (மறுமுறை) பயன்பாடு | 235 |
| 2 | Ekaa Trader 1467 sidco industrial Estate Karaikudi | கையுறை (மறுமுறை) பயன்பாடு | 190 |
| 3 | Arjununai Agencies 11 Vengalakadai 2nd street madurai | கையுறை (மறுமுறை) பயன்பாடு | 210 |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Ekaa Trader 1467 Sidco industrial Estate Karaikudi நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1, பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்

2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண் 511** அனுமதிக்கப்பட்டது

**தனி அலுவலர்**
**சிவகங்கை நகராட்சி**